2015 செப்டம்பர் 28]

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே முன்னேறிய நாடுகளுக்கெல்லாம், முன்மாதிரியாக தமிழ்நாட்டையும், தமிழ் இனத்தையும் உயர்த்த வேண்டுமென்ற உயரிய இலட்சியத்தோடு, கண் துஞ்சாமல், நாளெல்லாம் உழைக்கும் தமிழ்த்தாயின் மூத்த குடிமகளாக இருக்கின்ற, நாங்கள் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—40

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014—2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது மற்றும் பத்தொன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.

7. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தலா ஒரு வெற்றிடத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 7—2—2016 வரை ஆகும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 16—8—2017 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப் பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத் தாளினை 29—9—2015 காலை 10—00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்

படிவம் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 29—9—2015 நண்பகல் 12—00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 29—9—2015, பிற்பகல் 2—00 மணிக்குள் தங்களது வேட்புத் தாள்களைத் திரும்பப் பெறலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்புத் தாளின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.